# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தம்)

***1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களால் 2023, சனவரி மாதம் 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2022, நவெம்பர் மாதம் 10 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***164 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 15.00** **தபாற் செலவு : ரூபா 50.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறாக அப்பிரிவின் சட்டப்பயனாவது இயைபான சேவை வழங்குனர்களினால் விதிக்கப்படும் விதிப்பனவு அல்லது அறவீட்டை விதித்து சேகரிப்பதற்கான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துதல் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு அமைச்சருக்கு ஏற்பாடு செய்வதற்கானதாகும்.*

## கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தம்)

*ச.வ.- ஓ. 21/2022*

**1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தினைத் திருத்துவதற்கான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1972 ஆம் ஆண்டின் 10 இலக்க சட்டத்தின் 3 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**2.** 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, அதன் (5) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (உ) என்னும் பந்தியில், "தடைசெய்தலும் என்பதும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தடைசெய்தலும் என்பதும்; அத்துடன்"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் முடிவில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஊ) கப்பற்றொழில் முகவர்களால், சரக்கனுப்புநர்களால், கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்களால் மற்றும் கொள்கலன் செயற்படுத்து

*நர்களால் அளிக்கப்பட்ட சேவைகளுக்காக அவர்களின் இயைபான சேவை வழங்குநர்களினால் விதிக்கப்படும் விதிப்பனவுகள் அல்லது அறவீடுகளையும் மற்றும் அத்தகைய விதிப்பனவுகள் அல்லது அறவீடுகளை விதித்துச் சேகரிக்கின்ற நடவடிக்கைமுறையை ஒழுங்கு படுத்துதல் என்பதும்.".*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்